# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*




## நம்மை வழுவாது காத்துக்கொள்ளும் விசுவாசம்!

இன்று அனேக விசுவாசிகள், வாழ்வின் பல்வேறு கடின சூழ்நிலைகளில், தங்கள் விசுவாசத்தில் தடுமாற்றம் அடைகிறார்கள்! 'விசுவாசமே' இந்த பூமியில் தேவன் நமக்கு ஒப்புவித்த பாதுகாப்பான 'வாசஸ்தலம்!' என யூதா.5 எடுத்துரைக்கிறது!

தூதர்களேயானாலும், இந்த வாசஸ்தலத்தின் மேன்மையை காத்துக்கொள்ளத் தவறியதால் சோரம்போய் வீழ்ச்சியடைந்தார்கள்! என யூதா எச்சரித்தார். பல்வேறு துன்ப சூழ்நிலைகளில், அதி முக்கியமானது 'அந்த சூழ்நிலை' மத்தியில் நம் விசுவாசத்தை காத்துக் கொள்ள, தைரியமாய் போராடி பரிசுத்தாவியில் ஜெபிப்பதேயாகும்! இவ்வாறு பாதுகாக்கப்பட்ட மகா பரிசுத்த விசுவாசமே நம்மை கிறிஸ்துவுக்குள் வழுவாதபடி காக்க வல்லமை கொண்டது, என யூதா அறிவித்தார்! (யூதா.3,20–29).

-tr

பெட்டகம் 22 · பிப்ரவரி 2020 · பரல்கள் 2



# சிலுவை வழி விலகாத சபைகள் வேண்டும்!

'சத்தியத்தின் உறுதிக்கு' துயரம் ஏற்படும் என்ற போதகம் வேதத்தில் மிகத் தெளிவாகவே இருக்கிறது! சபை சரித்திரத்திலும் திருஷ்டாந்தமாய் இருக்கிறது! ஆனால், உத்தம சபை சரித்திரத்தின் திருஷ்டாந்தத்தைப் பின்தொடர்ந்து வரும் சபைகளைத்தான் இன்று காண அரிதாய் இருக்கிறது! வீழும் சபைகள், எப்போதாவது உலகத்தைக் குறித்துப் பேச முற்பட்டால், "ரொம்ப மோசமான பாவங்களுக்கு நாம் விலகி நிற்க வேண்டியதுதான்! 'முழு அளவில்' நாம் உலகமாய் மாறிவிடக் கூடாதுதான்...." என்றெல்லாம் மழுப்பி பேச துவங்கி விட்டார்கள்!

சபை மாந்தரே கேளுங்கள்: "நம் சபைகளை சீயோன் பர்வதத்தில் கட்டுவோமாக! இந்த உலகத்தை துணிவுடன் ஏறிட்டு நின்று 'உலகமே! மனந்திரும்பி, நாங்கள் நிற்கும் பர்வதம் ஏறி வாருங்கள்!' என்றே அழைப்பு கொடுப்போமாக! இதற்கு மாறாக 'எவ்வித கொடிய சூழ்நிலையிலும்' உலகத்திற்குள் நாம் இறங்கிவிடாதிருப்போமாக! நம் கிறிஸ்தவத்தின் சிங்காரமே சிலுவைதான்:

அந்த சிலுவையின் முழக்கமோ, "உலகத்திற்கும் சுயத்திற்கும் மரித்து வாழுங்கள்! பிரிந்து வாழுங்கள்! ஒருபோதும், ஒத்தவேஷத்திற்கு சமரசம் சேராதிருங்கள்!" என்ற முழக்க மேயாகும். சிலுவையைக் கண்டடைந்தவர்களில் ஒருவர் கூட, ஒத்த வேஷத்திற்கு தாழ்ந்தது இல்லை!!

*-Ed*


## 2020 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **பிப்ரவரி 10ம்தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## ‘சபை கட்டப்பட’ ஏழு முக்கிய இயேசுவின் அடிச்சுவடுகள்!

**நா**ம் வாழும் இக்காலத்து கிறிஸ்தவ சபைகளை ஏறிட்டுப் பாருங்கள்! ‘பாதாளம் மேற்கொள்ளாத சபை’ என்ற உயர்ந்த தரம் சரிந்து, காமமும், பாவமும், பணமும், உலகமும் மேற்கொண்ட சபைகளே எங்கும் அதிகபட்சமாய் நிறைந்திருக்கிறது. இந்த சீரழிவிலிருந்து சபை மீட்கப்பட, நாமோ அவரது அடிச் சுவடுகளை பின்பற்றுவதே, நம் சபையின் பூரண பாதுகாப்பும் ஜெயமுமாய் இருக்கிறது!

*முதலாவதாக, இயேசு தான் செய்த எல்லாவற்றிலும் தன்* ***பிதாவின் மகிமையைத் தேடினார்*** (யோவான்.7:18). அவருக்கு மிகப் பெரிய பேரார்வமாயிருந்ததெல்லாம், மானிட சமுதாயம் எண்ணுகின்ற மிகச் சிறந்தவைகளாயிருந்தாலும், அது எவ்வளவு மிக நல்ல நோக்கத்தோடு இருந்தாலும்..... “அவரின் பிதாவின் நாம மகிமையே” அவருக்கு பேரார்வமாய் இருந்தது (யோவான்.17:4). அவர் பிதாவின் முகத்திற்கு முன்பாகவே வாழ்ந்தார்! எல்லாவற்றிலும் தன் பிதாவை மாத்திரமே பிரியப்படுத்த விரும்பினார்!

> **அவர் பேசும்போது, தன்னை கவனித்து கேட்ட மக்களுக்கு முன்பாக நில்லாமல், தன் பிதாவுக்கு முன்பாக நின்றே தேவனுடைய வார்த்தையைப் பேசினார். இவ்வாறாக, ஜனங்களை அல்ல...... பிதாவையே பிரதானமாக சேவித்தார்!**

இவ்விதமாகவே, நாமும் தேவனை சேவித்திட வேண்டும். **நாம் முதலாவதாக** சபையின் ஊழியனாய் அழைக்கப்பட வில்லை.... ஆனால் “**கர்த்தரின் ஊழியனாகவே**” அழைக்கப் பட்டிருக்கிறோம். நாம் முதலாவதாக ஜெபிக்கும்படி ஆண்டவர் கற்றுத் தந்த ஜெபம் “பிதாவே, உம்முடைய நாமம் மகிமைப் படுவதாக” என்பதேயாகும். நாம் ஜனங்களுக்கு ஊழியம் செய்திட விரும்பினால், ‘மனுஷரைப் பிரியப்படுத்துகிற வர்களாய்’ கதியடைந்து, நமக்காகவே ஓர் கௌரவத்தை கட்டுகிறவர்களாய் மாறிவிடுவோம்!

*இரண்டாவதாக, இயேசு தான் பெற்றிருந்த எல்லாவற்றையும் விட்டுவிட்டார்! அதை சபைக்காகவே*

செய்தார். அவர் சபையின் அஸ்திபாரத்தைப் போட வந்தபோது, எதையும் தனக்காக வைத்துக் கொள்ளவில்லை. "கிறிஸ்து சபையை அன்புகூர்ந்து, **தன்னையே சபைக்கு ஒப்புக்கொடுத்தார்**" என்றே வாசிக்கிறோம்! (எபே.5:25).

அவருடைய மரணத்தை விவரித்த ஏசாயா தீர்க்கதரிசி: "**அவர் தன்னுடைய சொந்த நன்மைகளுக்கு யாதொரு சிந்தையும் வைக்காமல் மரித்தார்**" என்றார் (ஏசாயா.53:8 Message Bible). இதை சற்று யோசித்துப் பாருங்கள்: அவர் ஜீவித்து மரிக்கும்வரை தன் சொந்த நன்மைக்காக ஒரு சிறிய சிந்தை கூட வைத்திருக்கவில்லை! தன்னை முழுவதும் சபைக்கு ஒப்புக்கொடுத்து விட்டார். இந்த வழி நடக்கவே அவர் நம்மை அழைக்கிறார்! இவ்வழி நடக்க விரும்புகிறவர்கள் மாத்திரமே, '**புதிய உடன்படிக்கை சபையை**' கட்டமுடியும்!

அப்படி ஒரு சபையை கட்டுவதற்கு, நம் ஜீவியத்தில் ஏராளமான **அசௌகரியங்களை சந்திக்க** நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்! நம்முடைய அன்றாட நடைமுறை சுமுகமான ஜீவியம் சீர்குலைந்து போகவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்! நம்மை பிறர் ஆதாயப் படுத்திக் கொள்ளவும், நம்முடைய பூமிக்குரிய ஆஸ்திகள் பிறரால் துஷ்பிரயோகம் பண்ணப்படவும், வாழ்வின் எவ்வித அழுத்தத்தையும், யாதொரு குறைசொல்லும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளவும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்!

மூன்றாவதாக, இயேசு நம்முடைய துக்கங்களில் பிரவேசித்தார். அவர் நம்முடைய அனைத்திலும் ஒன்றரக் கலந்தார். அவர் நமக்கு உதவி செய்வதற்கு, அவர் **தேவ குமாரனாயிருந்தும் ஒரு கல்வி திட்டத்தை** அவரே முதலாவதாகப் பெற்றுக் கொண்டார்! பல பாடுகள் மத்தியில் அந்த கல்வித்திட்டத்தைக் கற்றுக்கொண்டார் (எபி.2:17;5:8). இவ்வாறாகவே, அவர் நம்முடைய முன்னோடியாய் மாறினார்! (எபி.6:20).

**நாம் பல்வேறு உபத்திரவங்களில் பாடுபட்டு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள் வதற்கு ஆயத்தமாயில்லையென்றால், நாம் பிறருக்கு உதவி செய்யமுடியாது.**

இவ்வகையில், வெறும் பிரசங்கிகளாய் அல்ல! நம் சபையிலுள்ள சகோதர சகோதரிகளுக்கு '**சிறிய – முன்னோடிகளாய்**' இருப்பதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம். இதன் விளைவாய், நாம் பல வேதனையும் கஷ்டமும் நிறைந்த உபத்திரவங்களுக்குள் சென்று, தேவனுடைய ஆறுதலையும், அவர் தரும் பெலனையும், அந்த எல்லா சூழ்நிலைகளிலும் பெற்றுக் கொள்கிறோம்! இப்போது நாம் பிறருக்கு ஜீவன் - தரும் பங்கைக் கொடுப்பதற்கு முடியும்! அதுவெறும்,

*வேதத்தைப் படித்து அல்லது புத்தகத்தைப்படித்து அல்லது ஒரு பிரசங்கத்தைக் கேட்டு பேசுகின்ற ஒரு செய்தி அல்ல! (2கொரி.1:4).*

*நான்காவதாக, இயேசு தொடர்ச்சியாக தன் இருதயத்தில் சீஷர்களை சுமந்தார்! அதை அவர்களுடைய நன்மையை எப்போதும் விரும்பியே அவ்வாறு செய்தார். இந்த அவருடைய செயலில் இரண்டு பகுதிகள் உண்டு:*

1. *அவர் எல்லா நேரங்களிலும் தன் சீஷர்களிடத்தில்* **ஒரு அடிமையின் மனப்பான்மையை** *வைத்திருந்தார். அவர் யாரிடமும், யாதொன்றும் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை! ஆனால் அவர்களை எப்படி ஆசீர்வதிக்கலாம், எவ்வாறு உதவி செய்யலாம், என்ற சிந்தையே எப்போதும் கொண்டிருந்தார்.*
2. *அவர் சீஷர்களுக்கு நன்மையான புத்திமதிகளைத்தர, அது சில சமயங்களில் கடினமான* **கடிந்து கொள்ளும் வார்த்தையாயிருந்தாலும்** *அப்படிச் செய்தார்! ஏனென்றால், அவர்களுடைய நித்திய நன்மையை அவர் தேடினாரே அல்லாமல், தன்னை ஒரு 'மென்மையான புருஷன்' என காண்பிக்கும் மதிப்பை அவர் விரும்பவில்லை.*

*கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு ஊழியம் செய்யும் நாம் எல்லோரும் "பவுலைப் போலவே கூறுவதற்கு" திராணியுள்ளவர்களாயிருக்க வேண்டும்: "உங்களுக்கு உண்டான யாதொன்றிலும் எனக்கென்று ஆதாயம் தேடவில்லை. நான் ஒருபோதும் உங்கள் பணத்தையோ அல்லது உங்கள் பரிசுகளையோ நான் விரும்பியதில்லை. உங்களுக்குரிய யாதொன்றையும் நான் விரும்பாமல்,* ***உங்களையே விரும்பினேன்!*** *நான் தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் மறைக்காமல் உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்படி எல்லாவற்றையும் அறிவித்தேன்" என்றார் (2கொரி.7:2; அப்.20:33; 1கொரி.9:15; பிலி.4:17; 2கொரி.12:14; அப்.20:20, ஆகிய வசனங்களைத் தியானியுங்கள்).*

*பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் 'இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் பேசுவதற்கு முன்பாக' தேவனுடைய சமூகத்தில் அவர்களுடைய நிலையை முன்வைத்து சிந்தித்தார்கள்!*

**இவ்வாறு 'தேவனுடைய சமூகத்தில்' மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து சிந்தித்து, அவர்களுடைய துக்கங்களையும், அவர்களுடைய பிரச்சனைகளையும் குறித்து அக்கறைக்கொள்ளும் தம் தாசர்களுக்கே 'ஒரு தீர்க்கதரிசன ஊழியத்தை' தேவன் தர முடியும்!**

*பிறருடைய இடத்தில் நம்மை வைத்து, அவர்கள் சொல்லும் துயரத்தை புரிந்துக்கொள்ள, நம் மனதை பழக்குவிக்க வேண்டும். நம்மைவிட ஏழைகளானவர்களின் வீடுகளை சந்தித்து, அவர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும்! அப்போது மாத்திரமே, நாம் அவர்களுடைய உபத்திரவங்களுக்குள் பிரவேசித்திட முடியும். அப்படியில்லையென்றால், நம்முடைய ஊழியம் அவர்களுடைய 'தேவைக்கும் பிரச்சனைகளுக்கும்' பொருந்தாததாய் மாறிவிடும்!*

*ஐந்தாவதாக, இயேசு தன் ஜீவியத்தில் முதலாவதாக வாழ்ந்து அதன் பின்பே அவைகளைப் பேசினார். 'மலைப்பிரசங்க செய்திகள்' (மத்தேயு.5,6,7) அன்று முன் இரவு இயேசு தயாரித்த செய்திகள் அல்ல. அப்படி அவர் செய்யவில்லை! அது, 30 ஆண்டு காலமாய்* **வாழ்ந்து அனுபவித்த** *பலன்களையே, அவர்களுக்கு அங்கு பிரசங்கித்தார்! இதன் மூலம் நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் "நாம் ஒரு இளைப்பாறுதலின் ஜீவியத்திற்குள் பிரவேசிக்காமல் இருந்து கொண்டு" அதில் பிரவேசித்ததைப் போன்ற தோற்றத்தை நம் பிரசங்கத்தின் மூலம் ஒருபோதும் கொடுத்துவிடக்கூடாது. இதற்கு பதிலாக,* **இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்** *ஒரு இனிய வாழ்க்கைக் காக நம்மிடம் தீராத ஏக்கம் இல்லையென்றால், அதைக்குறித்து நாம் முற்றிலுமாய் வெட்கமடைய வேண்டும். அவ்வாறு துயரம் அடைந்து, இந்த அருமையான ஜீவியத்திற்குள்ளாக நாமும் பிரவேசித்திட ஓர் பற்றி எரியும் விருப்பத்தை பெறும்வரை, தேவனுடைய முகத்தை தேட வேண்டும்! இதன் பின்பே, "ஓர் அதிகாரத்தோடு" நாம் பேசமுடியும்.*

**இவ்வாறு நம் ஜீவியத்தில் ஒன்றாக மாறிவிட்டவைகளை மாத்திரமே நாம் பேசுவதற்கு, எப்போதும் தாழ்மை கொண்டவர்களாயிருக்க வேண்டும்! அல்லது 'குறைந்த பட்சம்' நம் முழு இருதயத்தோடு சில பகுதிகளைக் குறித்து 'நாம் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தால்' அவைகளைப் பேசலாம்!**

*ஆறாவதாக, எல்லாவற்றையும் தானே செய்யும்படி இயேசு ஒருபோதும் விரும்பியதில்லை! அவர் செய்த அற்புதங்களில் கூட பிறரை ஈடுபடுத்திக்கொண்டார்..... கானாவூரில் திராட்சரசத்தைக் கொடுத்தது, ஐயாயிரம் பேர்களை போஷித்தது, லாசருவை உயிரோடு எழுப்பியதிலும்கூட பிறரை ஈடுபடுத்திக்கொண்டார். ஒவ்வொரு சமயத்திலும் 'எளியபகுதியை' மற்றவர்கள் செய்யும்படி கேட்டுக் கொண்டார், 'ஆனால் அவரோ கடின (முடியாது போன்ற) பகுதியை' அவரே செய்து முடித்தார். கடைசியாக, அவர் தன் சீஷர்களிடத்தில் கூறும்போது, தான் செய்தவைகளைக் காட்டிலும் பெரிதான கிரியைகளை நீங்கள் செய்வீர்கள் என்றே கூறினார்! (யோவான்.14:12).*

இந்த மாதிரியையே நாமும் பின்பற்றி, நம் ஸ்தல சபைகளிலுள்ள **சரீர–ஊழியத்தின் ஓர் சமநிலை** இருந்திடச் செய்யவேண்டும்! அப்போது மாத்திரமே, நம் சபைகளில் தேவனுடைய நோக்கம் நிறைவேறிட முடியும். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவங்களுக்கும், ஒரு குறிப்பிட்ட காரியத்தை செய்யவைத்து, ஒரு விசேஷித்த கல்வியைத்தந்து, நம் எல்லோரையும் தேவன் நடத்தி வந்திருக்கிறார். இவ்வாறு, நம் ஒவ்வொருவருக்கும், சபையை ஐசுவரியமுள்ளதாய் மாற்ற 'விசேஷித்த காணிக்கையை' நமக்கு தந்திருக்கிறார்.

**இவ்வாறு, ஒரு சபையிலுள்ள எல்லா சகோதர சகோதரிகளும் "பாடுபட்டு, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களே" தாங்கள் கொண்டு வரும் ஜீவிய காணிக்கை மூலமாக ஒரு சபையை ஐசுவரியமுள்ளதாய் மாற்ற முடியும்!**

ஆகவே, தங்கள் உபத்திரவங்களில் 'தேவனிடமிருந்து கற்றுக் கொண்டவைகளை' பகிர்ந்தளிக்கும்படி சகோதர சகோதரிகள் ஊக்குவிக்கப்படவில்லையென்றால், அந்த சபை ஒரு ஏழை சபையாய் மாறி விடும்! "நீங்கள் மாத்திரமே சபையை ஆசீர்வதித்திட முடியும்" என்ற எண்ணத்தில் உங்களைக் குறித்தும், உங்கள் ஊழியத்தைக் குறித்தும், அப்படி ஒரு உயர்ந்த சிந்தை கொண்டிருந்து.... பிறருடைய ஊழியங்களுக்கு ஒருபோதும் இடையூறாய் இருந்திடக்கூடாது!

ஏழாவதாக, இயேசு தொடர்ச்சியாக தன் பிதாவின் முகத்தை ஜெப நேரத்தில் தேடி, தன் ஜீவியத்திற்கும் தன் ஊழியத்திற்கும் அவரிட மிருந்தே உதவி பெற்றார். நம்முடைய ஊழியம் வலிமையுடையதாய் இருக்கவேண்டுமென்றால், நாம் கர்த்தரையும், பரிசுத்த ஆவியின் வரங் களையும், வாஞ்சை நிறைந்த ஜெபத்தோடு தேட வேண்டும்! தம்முடைய **சபையை கர்த்தர் கட்டுகிற விதமாகவே நாமும் கட்ட** விரும்பினால், நம்முடைய சொந்த ஞானத்தை, திறமைகளை, சார்ந்து கொள்ளக் கூடாது!

இயேசுவின் அடிச்சுவடுகள் 'மூடி மறைந்துவிட்ட' இந்த கொடிய நாட்களில், நாமோ, அவரது அடிச்சுவடுகள் ஒன்றே நம் கதி என, அதை கூர்ந்து கவனித்து அதில் நடந்து, அவரது சபையை கட்டுவதற்கு பாடுபடுவோமாக!

**இயேசு தன் ஜீவியத்தில் செய்து காண்பித்த** – உண்மையான பரிசுத்தம் எப்போதுமே 'பிறர்மீது கொண்ட ஊக்கமான அன்பை' பிரதிபலிக்கும்! இந்த மெய்யான பரிசுத்தமே 'அவரது சபை கட்டப்பட' மூலதனமாய் இருக்கிறது!

## என்னை அவருக்குள் இழுத்துக் கொண்ட தேவன்!

*தந்தை-லா- கோம்பே அவர்கள் எனக்கு கடிதம் எழுதியிருந் தார்கள். அக்கடிதத்தில் அவர் பிரதானமாய் குறிப்பிட்டது என்ன வெனில் "தேவன் என்மீது விசேஷித்த நோக்கத்தை வைத்திருக்கிறார்!" என்பதை தனக்கு வெளிப்படுத்தினார் என முக்கியப்படுத்தியே எழுதியிருந்தார். என் உள்ளத்திலோ, இந்த கடிதத்தினிமித்தம் யாதொரு சலனமும் ஏற்படவில்லை. ஆகிலும் என்னை அடிபணிந்து "கர்த்தாவே, உம் சித்தம் எதுவோ, அதுவே ஆகட்டும்!" என்றே ஜெபித்தேன். "தேவன் தந்த* **நீதியான கண்டிப்பும்** *அல்லது அவர் எனக்குத் தந்த* **மன உருக்கமும்**" *ஆகிய அனைத்துமே என் கண்களுக்கு முன்பாக சமமாகவே தோன்றியது.*

*நான் ஜெனிவா செல்வது தேவனுடைய சித்தமாக இருக்கலாம்! என்ற எண்ணம், என் இருதயத்திற்குள் இருந்தது உண்மைதான். ஆகிலும், அதைக்குறித்து நான் எந்த ஒரு நபரிடமும் பேசி ஆலோசிக்கவில்லை. நானோ, தேவன் தம்முடைய* **'வல்லமையான தம் சித்தத்தை'** *எனக்கு காண்பிக்கும் படியே அவருக்கு காத்திருந்தேன். ஏனெனில், சாத்தான் எப்போதுமே அவனுடைய தந்திரங்களை 'மறைத்து வைத்து' அதை நான் பெற்றுக்கொள்ளச் செய்வான் என்ற உண்மையை நான் பலமுறை அறிந்திருக்கிறேன்.*

> இப்போதும் 'தேவன் எனக்குத் தந்த எல்லையை விட்டு என்னை வெளியேற்ற' பிசாசானவன் முயற்சித்து, தந்திரங்களை வனைந்திருக்க முடியும் என்ற எச்சரிக்கையை என் உள்ளத்தில் ஆழமாய் பெற்றிருந்தேன்.

*நான் எவ்வளவு அதிகமாய் என் சொந்த இயலாத தன்மையைக் கண்டேனோ, அந்த அளவிற்கு நான் தேவனுடைய திட்டத்தில் செம்மையாய் பொருந்தியிருப்பதைக் கண்டேன்!*

*என் நிலைமை எதுவாயிருந்தாலும், ஓ கர்த்தாவே! இந்த பெலவீனமும் இழிவானவளுமாகிய என்னையும் உம்முடைய தூய பணிக்கு பயன்படுத்திக்கொள்ளும்! என முற்றிலுமாய் அர்ப்பணித்து ஜெபித்தேன். நீர் எனக்கு அப்படிச் செய்தால் "சகல மகிமையும் உமக்கே வந்து சேரும். அப்போது எந்த மனுஷனும் அந்த கனத்தில் தனக்கென்று யாதொன்றையும் வைத்துக்கொள்ள முடியாது! கர்த்தாவே, இதை நான் அறிந்திருக்கிறேன்!" என அவருக்கு முன்பாக என் முழுமையும் தந்து அர்ப்பணித்தேன். மேலும் ஓ கர்த்தாவே, புகழ்பெற்ற ஒரு நபரையோ அல்லது விசேஷித்த தாலந்துகளைப்*

*பெற்றிருக்கும் ஒரு நபரையோ நீர் தெரிந்து கொண்டிருந்தால், அந்த நபர் தனக்கென ஒரு மேன்மையை பெற்றுக் கொள்ள முடியும்! ஆனால், நீர் என்னைத் தெரிந்துகொள்வீரென்றால், என் மூலமாய் யாதொரு நன்மையான செயலையும் நீர் செய்வீரென்றால் "அதற்கு நீர் மாத்திரமே பூரண கர்த்தாவாய்" இருந்திட முடியும்! என கூறி, என்னை அவருக்கு முன்பாக பணிந்து கொண்டேன்.*

*இவ்வாறாக, என் முழு ஜீவிய காரியங்களையும் தேவனுக்கு ஒப்புவித்துவிட்டு, வழக்கம்போல் தொடர்ச்சியாக என் ஆவியில் மௌனமாயிருந்தேன்! இந்த நிலையே, என்னை திருப்தியாக்கும் நிலையாயிருந்தது.*

**நான் அவருக்கு ஏதாகிலும் ஒன்றிற்காக அவசியமாயிருந்தால், அதை அவரே நிலைப்படுத்தி, எனக்காக அவரே செய்து முடிப்பார்! இவ்வாறாக, என் முழு தீர்மானத்தோடு 'அவர் தம் அழைப்பை' அருளிச்செய்து, எனக்குத் தரும் எந்த கட்டளையையும்..... அது, "என் ஜீவனைக் கொடுப்பதாயிருந்தாலும்" தந்து விடுவதற்கு ஆயத்த நிலையிலிருந்தேன்!**

*இப்போதோ, என்னைச் சுற்றியிருந்த பாரங்களிலிருந்து நான் விடுதலைபெற்று வழக்கம்போல், நோயுற்றோரை பராமரிக்கும் பணிக்கு தொடர்ந்தேன். அநேக வியாதியஸ்தரின் காயங்களையும், அழுகிய புண்களையும் நான் தொட்டு பரிவோடு செய்த அந்த பணியில், சுகப்படுத்த முடியாத ஏராளமான வியாதிகளை கர்த்தர் சுகப்படுத்தினார்! நான் இவ்வாறு பணி செய்த ஏழை ஜனங்கள், மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையிலும், பணம் செலவழித்து பார்க்க முடியாத நிலையிலும், இருந்தார்கள். அதுபோன்ற ஜனங்கள் மத்தியில் நான் போகும்படி செய்து, தேவன் அவர்கள் யாவரையும் குணமடையச் செய்தார்!*

*நான் செல்லும் இடங்களிளெல்லாம் தேவன் என்னோடு வருவதும்! அவரோடு இளைப்பாறுதல் காண்பதும்! சொல்லிமுடியாத மகிழ்ச்சியாயிருந்தது.* **அவர் என்னைத் தன்னோடு ஐக்கியப்படுத்தி,** *அவரது அளவில்லா, கரை காணா விசாலத்தில் என்னை அவர் இணைத்துக் கொண்டது, எத்தனை மகிழ்ச்சியாயிருக்கிறது! நான்கு சுவிசேஷ புத்தகங்களும், அதிலும் இரண்டு சுவிசேஷ புத்தகங்களில் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்ட "என்னிமித்தம் தன் ஜீவனை இழக்கிறவன் என் ஜீவனை பெற்றுக்கொள்வான்! ஆனால் தன் ஜீவனை தனக்கென காத்துக்கொள்பவன் அதை இழந்துபோவான்!" என்ற இயேசுவின் சத்திய வார்த்தைகள் என்னுடைய ஜீவியத்தின் மெய்யான பங்காய் மாறியது! இந்த ஆச்சரியமான அனுபவத்தை பெற்ற யாராயிருந்*

*தாலும், அவர்கள் பெற்ற ஜீவனை, அவரோடு இணைந்த ஐக்கியத்தை வார்த்தைகளால் விவரித்துச் சொல்லவும் இயலாது!*

– மேடம் குயான்

---

## ஆராதனையா? விக்கிரக – ஆராதனையா?

*இன்றைய நாகரீக உலகத்திலுள்ள கிறிஸ்தவர்கள், தாங்கள் வாழும் ஜீவியத்தைவிட, பேசிக் கொண்டிருப்பதையே அதிகம் விரும்புகிறார்கள். "வல்லமை, வல்லமை! ஓ" என ஆர்ப்பரிக்கிறார்கள். (சில இடங்களில் இதுவும் கூட இல்லை!) ஆனால், அவர்களின் கிரியைகளைக் கண்டால், ஆவிக்குரிய பெலவீனம் கொண்டவர்களா யிருக்கிறார்கள். இன்றைய ஆவிக்குரிய சூழலில் 'வார்த்தையைப் பேசியே' முடிவுரையும் செய்துவிடுகிறார்கள். ஏனென்றால் 'கிரியைகள்' அவர்களுக்கு அதிக விலைக்கிரயம் கொண்டதா யிருக்கிறது! "ஓ கர்த்தாவே நான் அனுதினமும் என்னுடைய சிலுவையை எடுத்து வர உதவிச் செய்யும்!" என எல்லோருமே ஜெபித்து விடுகிறார்கள். ஏனென்றால் அவ்வாறு ஜெபிப்பது மிக எளிது. அவர்களை கூர்ந்து கவனித்தால் "குனிந்து சிலுவையை ஏற்று, சுமந்து வருவதில்லை!". அது ஏனென்றால், அது அவர்களுக்கு கடினம்!*

**தாங்கள் சிலுவை சுமப்பதற்கு தேவனிடம் உதவியை கேட்ட அநேகர் 'செயல்படுத்தும் மெய்யான நோக்கத்தோடு' கேட்டதில்லை.**

*பின் ஏன் தேவனிடம் உதவியை கேட்பது போல ஜெபித்தார்கள்? அது அவர்களுக்கு சற்று ஆறுதலாய் இருந்தது! இன்னும் சிலர், அஞ்ஞானிகள் அலப்பும் வீண் வார்த்தைகளைக் கொண்டிருந்தார்கள், அவ்வளவுதான்! இவ்வாறு நாம் எடுத்துச் சொல்லும் அவர்களின் மெய்யான அந்தரங்க நிலையை, அநேகர் ஏற்றுக்கொள்ள மறுக்கி றார்கள். ஆகிலும், உணர்வடையும் சிலரை மனதில் வைத்தே 'உண்மை ஊழியர்கள்' அவர்களை சோர்வில்லாமல் கடிந்துரைக்கிறார்கள்!*

*சபை ஜீவியத்திலும் இரண்டு அபாயங்கள் உண்டு. அதை நாம் அறிந்து விலகி ஓட வேண்டும்.* **1) குளிர்ச்சியடையும் இருதயம் 2)அனல் கொண்ட தலை!** *மெய்யான தேவனுடைய அக்கினியைப் பெற்ற ஒருவன், அதற்குரிய தகுதியான ஜீவியத்தை முன் வைத்திருப் பான். ஏனெனில் தகுதியற்ற வாழ்க்கையில், ஒருபோதும் அக்கினி இருப்பதில்லை!*

**ஆவியானவரின் பரிசுத்தப்படுத்தும் கிரியைகள், 'பாவத்தை நியாயந்தீர்ப்பதில்' குளிர்ந்த மனநிலை கொண்டிருப்பதில்லை, அது எப்போதும் அனல் கொண்டிருக்கும்.**

*இதற்கு நேர் எதிராக, சபையின் எழுப்புதலுக்கு தடையாக வந்து நிற்பவர்கள் யாரெனில், 'தலைமாத்திரம் சூடாயிருக்கும்' சகோதர சகோதரிகளே ஆவார்கள்! யார் இவர்கள்? வேத அறிவு பெற்று, ஆவியின் அபிஷேகம் இல்லாதவர்கள்!*

*இதுபோன்ற கொடிய காலங்களில், நடைமுறை விழிப்புள்ள கிறிஸ்தவ ஜீவியத்திற்கு* **பகுத்தறியும் வரம்** *எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்பதை வெகுசிலரே அறிந்திருக்கிறார்கள். நாம் வாழும் கொடுமையான இந்த கடைசி நாட்களில், இந்த வரம் உயர்த்தி போற்றப்படுவதாக! பரிசுத்த ஜீவியத்தையும், பரிசுத்த சபையையும் வாஞ்சிப்போர் இவ்வரத்தை அளவில்லாத தாகத்தோடு தேடுவார்களாக! 'பகுத்தறியும் இந்த வரத்தில்' கூர்மையாய் இருப்பவர்கள் மாத்திரமே* **'பதறுக்கும்' 'கோதுமை மணிக்கும்' உள்ள வித்தியாசத்தை** *அறிந்து கொள்வார்கள்! இவர்களே, மிக எளிதில் மாம்சத்தின் கிரியைகளையும் ஆவியானவருடைய கிரியைகளையும் வேறு பிரித்துப் பார்க்க திறன் கொண்டிருப்பார்கள்.*

**ஆவிக்குரிய கிரியைக்கு ஊக்கம் தராத எவ்வித மனுஷீக கடின உழைப்பிற்கும் பலன் இருப்பதில்லை.** *தேவன் மீது அனல் கொண்ட அக்கினியாய் இருப்பவன், மனுஷீக புத்திக்கூர்மையை தொட்டவுடன், அவன் குளிர்ந்து விடுவான்! பாவத்தைக் குறித்தோ அல்லது நீதியைக் குறித்தோ வலிமையாய் நியாயந்தீர்க்க எழும்பும் கிரியையை 'மனுஷீக புத்திக்கூர்மை' சாந்தப்படுத்தி, இருதயத்தையோ மகிழச் செய்ய முயற்சிக்கும்! நாம் வாழும் இந்த நாட்கள் கொடிய குழப்பம் மிகுந்த நாட்களாகும்! இவ்வித நாட்களில், தெய்வ அன்பு நம் இருதயத்தில் இன்னும் ஊக்கமாய் பற்றி எரிவதாக.... அதே சமயம்,* **நம் எல்லா கிரியைகளையும்** *சோதித்து நியாயந்தீர்க்க வல்லமையான, தெய்வ ஞானத்திற்கு முன்பாக அவைகளைக் கொண்டு வந்து நிறுத்த தவறாதிருப்போமாக! ஆகவே உலையிலிருக்கும் அந்த அக்கினி எப்போதும் காக்கப்படுவதாக. இச்சமயத்தில்தான் 'சூடாகிவிட்ட-புகை போக்கி' அபாய நிகழ்வுகளை கொண்டு வர வாய்ப்பிருக்கிறது. சில சமயங்களில் அக்கினி உலைக்கு தலையைப் போல் இருக்கும் புகை போக்கி சிம்னி அந்த வீட்டையே கொளுத்தி விடும் அபாயத்தில் சிவந்து நிற்கும்! ஆகவே, முடிவாக இங்கு தரப்படும் வழிகாட்டி வார்த்தைகளை நீங்கள் கடைப்பிடியுங்கள்: "அனலான உலை! குளிர்ச்சியான புகை-போக்கி" என்பதே சிறந்த கிறிஸ்தவத்தின் மேன்மை.*

> **விக்கிரக-ஆராதனை என்பது, அபாத்திரமாய் வாழ்ந்து கொண்டு, தங்கள் சிந்தையிலும் செயலிலும் தேவனைக் குறித்த பரவசம் கொண்டிருப்பார்கள்! என்ற நிலைமையேயாகும்.**

*உத்தம கிறிஸ்தவ சபைகளின் மீது விழுந்த மிகப் பெரிய கடமை என்னவென்றால், தேவனைக் குறித்த போலியான எண்ணங்களிலிருந்து ஜனங்களை மீட்டு, அவர்களை பரிசுத்தமாகுதலுக்கு நடத்தி,* **தேவனுக்கு முன்பாக** *தகுதி கொண்டவர்களாய் அவர்களை நடத்துவதேயாகும்!*

*பொல்லாத உலகத்தில் வாழ்ந்து வருகிறோம்! மெழுகு உருகுவதைப்போல் காலம் வேகமாய் கரைந்து போகிறது! அன்று எசேக்கியேல் தீர்க்கதரிசி, ஆலயத்திலிருந்த கர்த்தருடைய மகிமையின் அக்கினி, வேகமாய் சபையை விட்டு வெளியேறுவதை, தன் சொந்த கண்களால் கண்டார்.*

*'ஆபிரகாமின் தேவன்' தம்முடைய பிரசன்னத்தை நம்மை விட்டு விலக்கி வருகிறார். அதற்கு பதிலாக, நம் முற்பிதாக்கள் அறிந்திராத 'வேறொரு தேவன்' நம் சபைகளுக்குள்ளும் நுழையப் பார்க்கிறான். 'இந்த தேவன்' யார் என்று எண்ணுகிறீர்கள்?*

**இந்த தேவன், நாமே வடித்துக் கொண்ட தேவன்! நாமே அவரை வடித்துக் கொண்டபடியால் .... அந்த தேவன் நம்மை ஒருபோதும் கண்டிக்கமாட்டார், நம்மை மறுரூபப்படுத்தவும் மாட்டார்!**

*ஆனால்* **தேவனுடைய மெய்யான மகிமை, ஒரு சூரியனைப் போல எழுந்து** *அன்பின் வெப்பத்தை நமக்குள் பாய்ச்சி ஆசீர்வதிப்பார்! 'அதே சமயம்' சடிதி ஒளியாய் நம் கண் பார்வையை மறைத்து தடுமாறச் செய்து, பின்பு சுகத்தையும் நிரந்தர வெளிச்சத்தையும் கட்டளையிடுவார்! நம் பிதாக்களின் இந்த தேவனே, சந்ததி சந்ததியாய் நம்மில் நிலைத்து நிற்க விரும்புகிறார். அவர் என்றென்றும் நம்மோடு தங்கும் வாசஸ்தலமாய் இருப்பதற்கு "அன்பும் விசுவாசமும் தாழ்மையும்" கொண்ட வாசஸ்தலமாய் நம்மையும் சபையையும் ஆயத்தம் செய்வோமாக. காரிருளான இக்கடைசி நாட்களில்,* **தேவன்** *நமக்கு இன்றியமையாத தேவையாயிருக்கிறார்! அவர் நம் சபைக்கு வரட்டும், தன்னையே நமக்கு முற்றிலும் வெளிப்படுத்தட்டும்! ஆமென்.*

*– A.W. டோசர்*

---

## ஜெயங்கொண்ட சபையே 'களியாட்டு மாந்தர்களை' மீட்கும்!

**அ***மெரிக்கா வீழ்ச்சி அடைந்து விட்டதா? அவ்வாறு சொல்வது தவறு! அமெரிக்கா ஏற்கெனவே விழுந்துவிட்டது என்பதுதான் சரி. அதைத் தொடர்ந்து, பிரிட்டன் போன்ற சொகுசு நாடுகளும் வீழ்ச்சிக்குள் நுழைய துடிக்கின்றன. இவர்கள் அடிமைகளாக வில்லை... ஆனால், இந்த ஜனங்கள் 'கட்டுகளுக்குள்' பிரவேசித்திருக்கி றார்கள். அது, அவர்களாகவே ஏற்படுத்திக்கொண்ட கட்டுகள்! தங்கள்*

மனசு விரும்பியதை ஏற்றுக்கொண்ட கட்டுகள்! சுய மோகத்திற்குள் தாங்களாகவே அனுமதித்துவிட்ட கட்டுகள்! இதன் விளைவு என்ன? **அவர்களின் ஒழுக்கங்கள் சீரழிந்து விட்டன!** தங்கள் நிலை, மிருகத்தைப் போல் மாறியிருந்தும், அது சுகமடைய வழிதேடாத மாந்தர்களாய் மாறிவிட்டனர்! நிஜத்தை இழந்துவிட்டு, நிழலுக்குத் தங்களை விற்றுப் போட்ட ஜனங்களை என்னவென்று சொல்வது? 'மெய் பொருளை' இவர்கள் புறக்கணித்தது போதாமல், அதைப் பகடி செய்யவும் தொடங்கிவிட்டனர்!

**கட்டளைகள் மீறப்படுவதும், தேவனை தூஷிப்பதும், தங்கள் ஆத்துமாவை அழிக்கும் அக்கிரமங்களால் வாரிக் கொள்ளப்படுவதுமே இன்றைய சமுதாயத்தின் நிலை!**

கொத்துக் கொத்தாய் ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களை பிசாசின் கையில் பேரம் ஏதும் பேசாமலே விற்றுவிட்டார்கள்! இது முற்காலத்தில் அல்ல, நம்முடைய காலத்தில் சம்பவிக்கும் கொடுமை. இதை ஏசாயா தீர்க்கதரிசி கூறும்போது "உம்மைப் பற்றிக்கொள்ளும் படிக்கு விழித்துக் கொள்கிறவன் இல்லை!" என கூறிவிட்டார் (ஏசா.64:7). ஏன் ஜனங்கள் இப்படி மதி மயங்கி விட்டார்கள். அவர்களைக் கட்டி வைத்த மாயக் கயிறு என்ன? 'மூளைச் சலவை' என்ற தீமை இவர்களுக்கு நடந்து விட்டதோ? இனிமேலாவது இவர்கள் ஏன் விழித்துக்கொள்ளக் கூடாது?

இவர்களை முன்னின்று நடத்தும் பிசாசு, மாம்ச இச்சை தரும் மாய இன்பத்தைவிட மேலான போதையை இவர்களுக்குத் தந்துவிட்டான்! "கடைசி நாட்களில், மனிதர்கள் **சுகபோக பிரியர்களாய்** இருப்பார்கள்" என காலத்தின் முடிவை சுட்டிக்காட்டும் அடையாளமாய் 'சுகபோகம்' கூறப்பட்டதைப் பாருங்கள். நரகத்தின் சுக போகங்கள், இந்த மண்ணிலே மனுஷருக்கு முன் வந்து விட்டதைப் பாருங்கள். அது, இந்த பூமியில் காய்ச்சப்படும் மதுபானங்கள்! மதுபானக் கம்பெனி களுக்கு அரசாங்கமே மானியம் அளிக்கிறது என கூறிக்கொண்டு அங்கு பணிபுரியும் ஆயிரமாயிரம் வேலையாட்கள் எப்படியெல்லாம் சாக்குபோக்கு சொல்வதை அவர்களின் உள்ளம் அறியவில்லையா? மதுபானத்திலிருந்து பிறந்து வரும் தீமைகள்தான் கொலைகள்! துப்பாக்கி எடுக்கும் கொடூரம்! இந்த மதுபானத்தில் ஆரம்பித்ததே யாகும்! சாலை விபத்துகளில் அநேக பொது ஜனங்கள் மரிப்பதற்கும், மதுபான கார்ஓட்டிகளே காரணமாயிருக்கிறார்கள்!

**நீதிமன்றங்களில் குவிந்து கிடக்கும் 'ஒழுக்க சீரழிவு' வழக்குகள், இந்த மதுபானம் பெற்றெடுத்த கனிகளேயாகும்! நாம் பெற்றிருக்கும் பதில் ஒன்றே**

**ஒன்றுதான்.... சிருஷ்டி கர்த்தாவினிடத்தில் மனந்திரும்பும் எழுப்புதல் ஒன்றே, இந்த நரக வாசலின் வேரை சாய்த்திட முடியும்!**

*எங்கோ தோன்றிய தீமையின் இராட்டினம், பலகோடி மக்களை தன்னிடத்தில் ஏந்திக்கொண்டு, தனக்காக காத்திருப்பவர்களின் வாசல் தேடி வந்து அவர்களை ஏற்றிக்கொள்கிறது. இந்த இராட்டினத்தில் ஏறுகின்ற கோடி கோடி மக்கள்* **தீமைகளை தித்திப்பு என கூறிக் கொள்கிறார்கள்!** *துடிப்பான வாலிபர்கள்* **'காம சொகுசே' வாழ்வின் பேரின்பம்** *எனக்கூறி நன்மை இன்னதென்பதை அறிந்து கொள்ள அக்கறையற்று வாழ்கிறார்கள்!* **ஜெயிப்பது யார்? என்ற சூதாட்டமே** *நித்தியத்திற்கு சமமாய் இவர்களை மயங்க வைத்துவிட்டது! இவர்களே, சுகபோகப்பிரியர்கள்!*

*போட்டி போட்டு குடிக்கும் மாந்தர்களின் பாவ கசப்பு, உச்சநிலைக்கு சென்று விட்டது. அவனை மனுஷனாய் வாழவிடாமல் மிருகமாய் மாற்றி விட்டது! குடிபோதையை எந்த புத்தியைக்கொண்டு அறிவுள்ளது என கூறுவார்கள்? கொழுத்த பன்றிகள், சகதியில் உருண்டு புரண்டு விட்டு மகிழ்ச்சியுடன் நடந்து செல்வதைப்போல்.... போதையில், சாக்கடையில் கூட உருண்டு புரண்டு விட்டு வீட்டிற்குத் திரும்பும் இவர்கள் 'தங்களை ஒரு கதாநாயகன்' என்றே எண்ணிக் கொள்கிறார்கள். இப்படி நிகழ்வது கற்காலத்திலா? இல்லை. இன்றைய நாகரீக கல்வி அறிவு மாந்தர்களிடத்தில் தாண்டவமாடும் பேய்த்தனம்! சரீரத்தில் ஆடம்பரம், ஆத்துமாவிலோ கறைகள்! எந்த அக்கிரமத் திற்கும் தங்களை விற்றுப்போட தயங்காதவர்கள்! எல்லாம், இக்காலத்து பாவ சீரழிவுகள்!*

*இவ்வாறாக 'காமவெறி' சுமை சுமந்து, 'சூதாட்ட' பேரழிவு கொண்டு, 'குடியின் குற்றத்தில்' ஆழ்ந்து நிற்கும் ஒருவன் "தன் சரீரத்தில் திடன் கொண்டவனைப்போல் இருந்தாலும், தன் ஒழுக்கத்தில் தளர்ந்துபோன பெலவீனன்". இதை லார்டு பைரன் தன் கவிதையில் எழுதும்போது:*

**அன்று அக்கினி போல் கண்டதை**

**இன்று சாம்பலாய் காண்கிறேன்!**

**என் சரீரம் நிற்கிறது....**

**அதற்குள் இருக்கும் ஆத்துமாவோ செத்துவிட்டது!**

**அன்று பாவம் அனுபவித்தேன்**

**இன்று அதை உடல் நடுங்கினாலும் இச்சிக்கிறேன்!**

*என் தலை நரைத்துவிட்டது!*

*ஐயகோ, என் இருதயமும் நரைத்து விட்டது!*

*என கவிதை எழுதி வெதும்பினார்.*

*தன் இளமை காலத்தை, பகலில் கிரிக்கெட் போன்ற விளையாட்டி னாலும், மாலையில் நைட்- கிளப்பிலும், தீய கம்ப்யூட்டரிலும், மொபைலிலும் செலவழித்து சீரழியும் மாந்தர்களை* **விடுவிக்க, வல்லமை கொண்ட சபையே** *ஜெயங்கொண்ட சபை என நான் கூறுவேன்!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## 'சர்வ வல்லவரின் நிழல்!' பரிசுத்தவான்களின் அனுபவம்!

*சர்வ வல்லவரின் நிழல்! என்ற அழகு நிறைந்த வாக்கியம் இந்த உலகில் எங்கு சென்றாலும் நீங்கள் கண்டுபிடிக்க இயலாது. அப்படி ஒரு பாக்கியத்தை கர்த்தர் தம்முடைய சொந்த ஜனங்களுக்கு மகத்துவமான பாதுகாப்பாய் அளித்திருக்கிறார். கால் கடுக்கும் வெற்று வனாந்தரத்தில்* **ஒரு கற்பாறை நிழல்** *எத்தனை மகிழ்ச்சி அளிக்கிறது. கடுமையான வெயில் நிறைந்த பயணத்தில்* **ஒரு மரத்தின் நிழல்** *எவ்வளவு இதமாயிருக்கிறது. இவ்வாறு இன்னமும் நெருங்கிச் சேரச் சேர கர்த்தருடைய பாதுகாப்பின் நிழல் அவருடைய* **செட்டையின் நிழலாய்** *மாறுகிறதே! எந்த எதிரியும் எந்த மழையும் குளிரும் தாக்காதபடி நம் ஆன்மாவிற்கு பாதுகாப்பைத் தரும் அவரது செட்டையின் நிழல்! இன்னும் கர்த்தரை நெருங்கி சேர்ந்திடும் தாசர்கள்* **கர்த்தாவின் கரத்தின் நிழலுக்குள்** *வந்து விடுகிறார்கள். அவர்கள் கூர்ந்து பார்க்கும் அந்தக் கரம், ஆணி துளைத்த கரமாயிருக்கிறது! அல்லேலூயா. அந்த தமது கரத்தால் நம்மை அணைத்துக் கொள்கிறார்! சில சமயம் தம் கரத்தைக் கொண்டு நம்மை தாங்கிக் கொள்கிறார்! இன்னும் சில சமயங்களில், தம் கரம் கொண்டு தமது மார்பில் முழுவதும் அணைத்துப் பாதுகாக்கிறார். ஆ அந்த, கரத்தில் நிழலின் மகத்துவமே நமக்கு மேன்மையாயிருக்கிறது!*

*"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்" எனக்கூறும் சங்கீதம் 91:1-ம் வசனத்தை உற்று கவனியுங்கள். இங்கே சர்வ வல்லவருடைய நிழல், அவ்வப்போது வந்து செல்லும் உல்லாச வீடாய் கூறப்படவில்லை. மாறாக, அது நாம் எப்போதும் தங்கியிருக்கும் ஸ்தலம்! இங்கு ஆறுதல் மாத்திரம் அல்ல, நம்முடைய வாசஸ்தலம் இதுவாகவே இருக்கிறது! ஆகவேதான், நாம் ஒருபோதும் தேவனுடைய நிழலை விட்டு வெளியே வந்துவிடக் கூடாது.*

**ஏனென்றால், அவ்வப்போது வந்து செல்லும் பார்வையாளர்களுக்கு (ஏளைை‑ வடிசள) அல்ல. அவரையே தஞ்சமாய் நாடி வந்து தங்குபவர்களுக்கே (னுறநடடநசள) கர்த்தர் தம்முடைய பாதுகாப்பை வாக்குரைத்திருக்கிறார்!**

*சர்வ வல்லவரின் நிழல், இரவில் உண்டாகும் எவ்வித பயங்கரத்திற்கும், தீமைக்கும் நம்மைப் பாதுகாக்கும்! அது, யுத்தத்தின் அம்புகளிலிருந்தும் பாதுகாக்கும். நோய்களுக்கும், மரணத்திற்கும், சங்காரத்திற்கும் நம்மைப் பாதுகாக்கும்! (வச.5,6). அது ஏனென்றால் அவர்களைப் பாதுகாப்பவர், சர்வ வல்லவர்! நாம்* **அவருடைய பரிசுத்த ஸ்தலத்தின் கூடாரத்தில்** *வாசம் செய்கிறபடியால் கிருபாசனத்தின் அண்டையில் வந்து நிற்கிறோம். நம்மை பாதுகாக்கும் உடன்படிக்கை பெட்டியில் இரக்கத்தின் இரத்தம் தெளிக்கப்பட்டபடியால், அவர் இரக்கம் நம்மை ஆக்கினைக்கு விடுவித்து காக்கிறது!*

**அந்த கிருபாசன உடன்படிக்கை பெட்டி இரவில் அக்கினி ஸ்தம்பமாய் நம்மை பாதுகாக்கிறது! பகலில் மேக ஸ்தம்பமாய் சூழ நின்று பாதுகாக்கிறது. இதுபோன்ற பாக்கியம் கர்த்தரையே தனது தாபரமாய் கொண்டவனுக்கே உரியது என 9-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.**

*இவ்வாறு "தீங்கு நாளில் அவர் என்னைத் தமது கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னை கன்மலையின்மேல் உயர்த்தும்" கர்த்தரின் சொல்லி முடியாத பாதுகாப்பை விட, இந்த உலகத்தில் வேறு எந்த பாதுகாப்பை நம் இருதயம் நாடிட முடியும்? (சங்.27:5).*

*பரிசுத்தவான்களின் மேன்மை எங்கு அடங்கியிருக்கிறது? யார் இவர்கள்? தேவனோடு இவர்கள் கொண்டிருக்கும் ஐக்கியத்தை எந்த சமயத்திலும் விட்டு நீங்காது,* **அவரது ஐக்கியத்தைக் காத்துக்கொண்ட பரிசுத்தவான்கள்!** *தாங்கள் கண்டடைந்த பாதுகாப்பு 'உன்னத மானவரின்' உயர்ந்த மறைவு என்பதை இந்த பரிசுத்தவான்கள் தெளிவாய் கண்டபடியால், அவரது ஐக்கியத்தைவிட்டு பாவமுமோ, சுயமுமோ, உலக மேன்மையோ அல்லது தாழ்ச்சியோ, உயர்வோ அல்லது தாழ்வோ, இன்பமோ அல்லது துக்கமோ.... ஏன், மரணம்கூட அவர்கள் தேவனிடம் கொண்ட ஐக்கியத்தை இழப்பதற்கு அனுமதிக்க மாட்டார்கள்! இது, எழுத்தின்படியான வர்ணனையான பாதுகாப்பு அல்ல. இந்த உன்னதமானவரின் பாதுகாப்பை அவரது* **பரிசுத்தவான்கள் வாழ்ந்து, அனுபவித்தார்கள்!** *இதுவே உங்கள் பாதுகாப்பாய் மாற தேவன் கிருபை செய்வாராக! ஆமென்.*

*– C.H. ஸ்பர்ஜன்*

## 'தெய்வ அன்பே' சகோதர அன்பின் ஆதாரம்!

*தசமபாகத்திலும் சகோதர அன்பே பிரதானம்! கொர்பான் காணிக்கையிலும் பெற்றார்மீது அன்பே பிரதானம்! பலிபீடத்தில் வைக்கும் காணிக்கையைவிட சகோதரனோடு ஒப்புரவாகுதலே பிரதானம்! ஜெபத்தைவிட சகோதரன் குற்றத்தை மன்னிப்பது பிரதானம்! என்றே ஆண்டவர் போதிக்கிறார்.*

*ஆண்டவர் போதிக்கிற அன்பின் ஜீவியம் நமது சுபாவத்துக்கு எட்டாத உயரமாயிருக்கிறது. பிறப்பு முதல் தன்னயத்திலே வேரூன்றி வளர்ந்து, அன்புக்கு அந்நியராய் போய்விட்டோம். சிலர், நாங்கள் தேவனிடத்தில் அன்பாயிருக்கிறோம், மற்றவர்களிடத்தில் அன்பாயிருக்க முடிய வில்லை என்கிறார்கள். வேறு சிலர், நாங்கள் மனுஷரிடத்தில் அன்பா யிருக்கிறோம், சமுதாய ஊழியத்தில் ஓடி - ஆடி ஈடுபட்டிருக்கிறோம், ஜனங்களுக்கு, சமூக சேவை பிரயாசப்படுகிறோம். ஆனால், தேவனிடத்தில் அன்பாயிருக்க முடியவில்லை என்கிறார்கள். இந்த இரு திறத்தார் சொல்வதும் பொய்! தேவ அன்பு வேறே, சகோதர அன்பு வேறே என்று ஆண்டவர் பிரிக்காமல், இரண்டையும் ஒன்றாய் இணைத்திருக்கிறார்.*

**தேவனிடம் அன்பாயிருக்கிறது மெய்யானால் சகோதரரிடம் அன்பில்லா திருக்க முடியாது! சகோதரரிடம் அன்பாயிருக்கிறது மெய்யானால் தேவ அன்பில்லாமல் அது முடியாது! தேவ அன்பும் சகோதர அன்பும் பட்சியின் இரு சிறகுகள் போலிருக்கிறது!**

*ஒரு சிறகாலே பட்சி பறக்காது. கற்பனைகளில் எந்தக் கற்பனை பிரதானமென்று வேதபாரகன் பன்மையில் அல்ல 'ஒருமையில்' கேட்டான். ஆண்டவர் உத்தரவாக, தேவ அன்பும் சகோதர அன்புமே பிரதான கற்பனை என* **இணைத்து 'ஒருமையில்' பதிலளித்தார்.** *தேவ அன்பும் சகோதர அன்பும் ஒரே அன்புதான். தேவ அன்பைப்பெற்று அந்த அன்பையே பிறருக்குக் கொடுக்கிறோம். "தேவனிடத்தில் அன்பு கூருகிறேன் என்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன்; தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" (1யோ4:20,21). சகோதர அன்பில்லாத தினாலே தான் சபைகளில் சகல குழப்பங்களையும் பிரிவினைகளையும் போராட்டங்களையும் அக்கிரமங்களையும் காண்கிறோம். தேவ அன்பு இல்லாததினாலே, சபையில் சகோதர அன்பு இல்லை! கிறிஸ்த வர்களுக்குள் எவ்வளவோ பலத்த மாறுதல் உண்டாக வேண்டி யிருக்கிறது! என்றே, நான் பெருமூச்சு விடுகிறேன்!*

*– பரமானந்தம் ஐயர்*

## ‘அன்பற்ற வீழ்ச்சியை’ மாற்ற வல்ல கர்த்தர்!

*நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற தேவனுடைய வல்லமை! என தேவனுடைய வார்த்தை விருதாவாய் நமக்குத் தரப்படவில்லை. ஆகவே ‘தெய்வ அன்பில் நான் வீழ்ச்சி அடைந்தேனே’ என மனம் துவளும் உங்களை ஆதரிக்கவே கர்த்தர் எப்போதும் கிரியை செய்கிறார்.* **அன்பின் தாழ்ச்சிக்கு துயரம் கொள்ளும் இருதயமே கர்த்தர் விரும்பும் இருதயம்.** *அவர்கள் நினைப்பதற்கும் மேலாக, அன்பின் வீழ்ச்சியை சீர்ப்படுத்தி, தெய்வ அன்பை அவர்கள் உள்ளத்தில் ஊற்றி விடுவார். இவ்வித வல்ல செயலுக்கு “என்னை நம்பு!” என்றே கர்த்தர் அழைக்கிறார்.*

*எந்த அன்பற்ற சூழ்நிலையிலும் “ஐயோ அன்பு காட்ட தவறி விட்டேனே” என* **உள்ளம் துவண்டு சோர்வடைந்து போவதுதான்** *பெரும் நஷ்டம்! நம் அன்பின் வீழ்ச்சி எதுவாயிருந்தாலும், நம் கர்த்தரை விட்டு விலகாதிருப்பதற்கே எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அச்சமயத்தில் தோன்றும் மனச்சோர்வு ‘தெய்வ அன்பிற்கு’ வேதனையை கொண்டு வந்து தரும் என்பதை அறிவோமாக. என்னோடிருப்பவர் என்னைக் கைவிடார் என்ற விசுவாசம் கொண்டவர்களே அவரை நம்பி, அவரிடம் கிட்டிச் சேர்வார்கள். கர்த்தர் அன்பின் சொரூபியும், அளவிட முடியாத அன்பின் பெருவெள்ளமும் கொண்டவர்!*

**ஆகவே, தன் அன்பற்ற வீழ்ச்சியை அவரிடம் அறிக்கை செய்யும் யாவருக்கும் அவர் உதவி செய்ய வல்லவர்!**

*உங்கள் சூழ்நிலையில், தெய்வ அன்பின் நீரோட்டத்திற்கு தடையாய் நிற்பவைகளை “அந்த தடை இன்னதென்று” கர்த்தரிடம் முறையிட்டால், அவர் உங்களை தூக்கியெடுத்து அன்பின் பெரு வெள்ளத்தை உங்களுக்குத் தருவது நிச்சயமல்லவா. உங்கள் கூக்குரலை கேட்கும் ஆண்டவர், உங்களுக்கு மகிழ்ச்சியுடன் உதவி செய்வார் என்பதை அறியுங்கள். அவர் விரைந்து வந்து, உங்கள் அன்பின் வெள்ளத்தை தடுத்து நிறுத்திய பாராங்கற்களையும், பெருவெள்ளத்தை தடுத்து நிற்கும் மணல் அரிப்புகளையும், அவரே தம் கரம் நீட்டி அள்ளி எறிந்துவிடுவார். தடையை முற்றிலும் அகற்றி, ஆற்றின் பெருவெள்ளம் ‘சலசலவென’ ஓடும்வரை அவர் ஓய மாட்டார்! அவர் உங்களைப் பார்த்து “பயப்படாதே, நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உங்கள்* **அன்பின் பெருவெள்ளம் தடையின்றி பாய்ந்திட,** *உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பேன்” என கூறும் அவர் வாசகத்தை உறுதியாக பற்றிக்கொண்டு அன்பில் பூரண வளர்ச்சி அடைவோமாக!*

*– ஏமி கார்மைக்கேல்*

# மரியா கொரெதி,

## உயிர்நீத்து பாவத்தை ஜெயித்த இத்தாலியா பெண்!



(1890 - 1902)

இத்தாலியா தேசத்தில் கொரினல்டோ என்ற ஊரில் 1890–ம் ஆண்டு பிறந்தவள் *மரியா கொரெதி*. தன் பெற்றோரின் ஏழு பிள்ளைகளில் மூன்றாவது மகள். விவசாய பண்ணை செல்வத்தில் வாழ்ந்த இவர்களின் குடும்பம் 1896–ம் ஆண்டு எல்லாம் இழுந்து வறுமைக்கு தள்ளப்பட்டார்கள். இந்நிலையில் ரோம் நாட்டிற்கு 50–மைல் அப்பாலிருந்த கொலிஜியாண்டர்கோ ஊருக்குச் சென்று மற்றொருவர் விவசாய பண்ணையில் கூலி வேலை செய்தார்கள். வறுமையினிமித்தம் செரினெல்லியும் அவருடைய மகன் *அலிசாண்ரோவும்* தங்கள் வீட்டில் சேர்ந்து வாடகைக்கு இருக்க பங்கிட்டு கொண்டார்கள். மரியா 9 வயதாய் இருக்கும்போது அவளுடைய தகப்பன் மரித்துவிட்டார். மரியாவின் அம்மாவும் மற்ற பிள்ளைகளும் வயலுக்கு வேலைக்கு சென்றவுடன் மரியா எல்லோருக்கும் சமைத்து கிழிந்த துணிகளை தைத்து தவழும் கடைசி பிள்ளை தெரேசாவை கண்காணித்து, வீட்டை கழுவி சுத்தமாய் வைத்திருப்பாள். இந்த மரியா ஆலயத்திற்கு ஒழுங்காக சென்றபடியால் பாவம் இன்னதென்பதையும் தீமை இன்னதென்பதையும் அறிந்திருந்தாள். அது மாத்திரமல்லாமல் பாவம் நரகத்திற்குரியதென்பதையும் பாவம் செய்யும் ஆத்துமா நரகத்திற்குச் செல்லும் என்பதையும் அறிந்திருந்தாள். அந்த குடும்பத்தில் மரியாவின் கிறிஸ்தவ பக்தி, அந்த பாலியத்தில் சிறப்பாய் இருந்தது!

1902–ம் ஆண்டு மரியா தன் தம்பியின் சட்டையை தைத்துக்கொண்டே தவழும் தெரேசாவை கண்காணித்துக் கொண்டிருந்தாள். அவள் வீட்டின் ஒட்டு – வாடகையிலிருந்த வாலிபன் அலிசாண்ரோ வயலில் கடலைப்பருப்பு அள்ளி கொண்டிருந்தான். மரியா, தன் வீட்டில் தனியாய் இருப்பாள் என்பது அவனுக்கு தெரியும். பாதி வேலையில் திரும்பி வந்த அந்த அலிசாண்ரோ என்ற இளைஞன் "என்னுடைய விருப்பத்திற்கு இணங்கவில்லையென்றால் உன்னை கொன்று விடுவேன்" என நீண்ட கத்தியை வைத்து மிரட்டினான். உன் விருப்பம் என்ன? என்று மரியா திருப்பிக் கேட்டாள். அவன், தன்னுடைய கற்பை அபகரித்து பாவம் செய்ய விரும்புகிறான் என அறிந்தவுடன், எழுந்து நின்று "உன் தீய எண்ணத்திற்கு உயிர் போனாலும் நான் சம்மதியேன். ஏனென்றால், உன்னுடைய செயல் பாவ செயல்! உன்னை நிச்சமாய் நரகத்திற்கு கொண்டு போகும்!" என சத்தமிட்டு கூறினாள். அவனோ துன்மார்க்க வெறியனாய் இருந்தபடியால், கூக்குரலிட்டு தன் கற்பை காத்துக்கொள்ள கூச்சலிட்டாள்.

அந்த கூச்சல் "இல்லை ஒருபோதும் இல்லை! இது பாவம்! தேவனும் நம் ஆண்டவரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என கடுமையாய் போராடினாள். உடனே அவன் கழுத்தைப் பிடித்து நெறிக்க மரியா உரத்த சத்தமாய் "நான் சாவனே அல்லாமல், பாவம் செய்திட உடன்பட மாட்டேன்" என கதறியவுடன் பயந்து போன அவன் 11 முறை கையில் வைத்திருந்த கொடுவாளால் அவளை குத்திக் கிழித்தான். வாசலுக்கு வெளியே ஓடிவந்த அவளை மீண்டும் 3 முறை குத்திவிட்டு தப்பிவிட்டான். ஓடிவந்த அலிசாண்ரோவின் தந்தை மரியாவை அருகிலிருந்த சிறிய மருத்துவமனைக்கு அழைத்து சென்று யாதொரு மயக்க மருந்தும் கொடுக்க முடியாமலே பல தையல்கள் போட்டார்கள். மயங்கிய நிலையிலிருந்து மரியா திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள். கண்ணீர் வடித்த டாக்டர் "மரியா என்னை நீ செல்லும் பரதேசீயில் நினைத்துக்கொள்" என கண்ணீருடன் கூறினார். சற்றும் தயங்காமல் "நிச்சயமாய் உங்களை நினைவுகூர்வேன்! நிறைய பிள்ளைகளை வைத்திருக்கும் என் அம்மாவை கர்த்தர் நலமுடன் காத்தருளட்டும்!" என கூறி மயங்கிய மரியா சில மணி நேரங்களில் மீண்டும் விழித்துக்கொண்டாள். தீது செய்த அலிசாண்ரோவை நான் மனப்பூர்வமாய் மன்னித்துவிட்டேன். அலிசாண்ரோவும் பரலோகத்திற்கு வந்து விட வேண்டும் என்றே விரும்பிகிறேன்" என கூறி மரித்தாள்! அந்த மரணம் தன் உயிரை பலி கொடுத்து பாவத்தை ஜெயித்த மரணமாய் ஒளி வீசியது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'ஆத்தும விரோதி' சாத்தான் பிடியிலிருந்து இரட்சிக்கப்படுங்கள்!

வாழ்க்கையில் வறுமைக்கோட்டில் வாழ்வோர், கடுங் கஷ்டத்தில் உழல்வோர்..... இரந்துண்ண மனமின்றித் தங்கள் மானத்தைக் காக்கும் பொருட்டுத் "தற்கொலை" புரிவதையும்கூட உலகில் நாம் காண்கின்றோம். ஆனால், வாழ்வில் 'தாழ்ச்சி ஏதும் இல்லாத' ஒரு கிறிஸ்தவ சகோதரி இம்முடிவை எடுக்க அவர்களுக்கு ஆலோசனை சொன்ன கொடிய நீசன் யார்? "உடம்பெல்லாம் மண்ணெண்ணெயை நன்றாக ஊற்றி நனைய வைத்துக்கொண்டு, நெருப்புக் குச்சியைக் கிழித்து வைத்து செத்து மடிந்து போ! இனி உனக்கு உலகம் வேண்டாம். கணவனை இழந்த உனக்கு இனி வாழ்க்கையில் சந்தோஷமேது?" என்ற மாபயங்கர ஆலோசனையை மிகவும் இங்கிதமாக அந்த சகோதரியின் உள்ளத்தில் போட்டு, அதில் வெற்றி பெற துடிக்கும் துஷ்டன் யார்? அவன், நம் ஆத்தும விரோதி சாத்தானே ஆவான். "தற்கொலை நாடிய என் அருமை மகளே, கொன்றுவிடும் அக்கினி பிரவேசத்துடன் உன் காரியம் முற்றுப் பெறப்போவதில்லை. பூவுலகின் அக்கினி உன்னை வேக வைத்தபின், நித்திய நரக அக்கினி யுகா யுகங்களாக உன்னைத் தொடரப் போகின்றது. அந்த அக்கினியின் உக்கிரத்தை உன்னால் சகிக்க இயலாது. என் அன்பு மகளே, நான் உன்னை நேசிக்கின்றேன். இக்கொடுஞ்செயலை எந்நிலையிலும் புரிந்து விடாதே!" என்ற ஆவியானவரின் அன்புக் குரலையும் அந்த மாது அன்று கேட்டுவிட்டாள். நல்ல வேளை, அவள் தப்பித்தாள்!

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த அந்த பெண், உடனே விழிப்படைந்து, மண்ணெண்ணெயை தூக்கி எறிந்துவிட்டு, தன் கைப்பிள்ளையை அணைத்துக் கொண்டு, "ஓ, தேவனே! அப்படியானால், என் இந்த பாவச் செயலை மன்னித்து, என்னையும் உம் மகளாய் மீண்டுமாய் ஏற்று, இன்றுமுதல் என்னை நடத்தும்!" என கண்ணீருடன் இரட்சகரிடம் தன்னை ஒப்புக்கொடுத்தாள்.

ஆம், பூமி எங்கும் உலாவி வரும் சாத்தான், நமது ஆத்தும விரோதி! ஏழை, நடுத்தர வசதி, பணக்காரன் என்பதெல்லாம் அவனுக்கு வித்தியாசம் இல்லை. அவர்கள் ஆத்துமாவே உலகில் உள்ள எதைக்காட்டிலும் விலையேறப்பெற்றது என்பதை, மானிடர் அறியாவிட்டாலும், அந்த துஷ்ட சாத்தான் அறிவான்! நம்மைத் தேடி வந்த 'ஆத்தும இரட்சகரை' கண்டு கொள்வோமாக! இல்லையேல், 'ஆத்தும விரோதி' நம்மையும் நம் ஆத்துமாவையும் கொன்று அழிப்பான் என்பது உறுதி!

*- கவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.